**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DINDIGUL.**

**S.C.** 60/2024

**Prosecution Witness** : 1

**Accused present. Both side counsels present.**

அரசு தரப்பு சாட்சி அசா.1 திருமதி. கீத்தலோசினி ஆஜர். சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

இறந்துபோன புகழ்நாதன் என் கணவர். என் கணவர் வீட்டாரும், எங்கள் வீட்டாரும் அடிப்படையில் உறவினர்கள். இந்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள 2 முதல் 11 வரை உள்ளவர்கள் எனக்கும் சொந்தக்காரர்கள், அவர்கள் எதிரிக்கும் உறவினர்கள். எதிரி எனது கணவரின் தங்கை கணவர். எதிரியின் பாட்டி எங்கள் ஊரின் மேற்கு தெருவில் குடியிருக்கிறார்கள். அவர் வீட்டிற்கு அருகே தான் அசா.2 சரவணன் வீடும் இருக்கிறது. என்னுடைய வீடு, செல்வக்குமார் வீடு,ஜெயராணி வீடு ஆகியவை அனைத்தும் ஒரே தெருவான கிழக்குத் தெருவில் உள்ளது. ஒவ்வொருவரின் வீட்டிற்கும் இடையில் சில வீடுகள் இருக்கிறது. சரவணன் வீட்டில் இருந்து அந்த தெருவை மேற்கு தெரு என்று சொல்வார்கள். என் வீட்டில் இருந்து ஜெயராணி வீட்டிற்கு செல்வதற்கு 2 நிமிடத்திற்கு குறைவாக ஆகும். அன்றைய தினம் சண்டை வரக்கூடாது என்பதற்காக என் கணவரை வீட்டில் வைத்து கதவை அடைத்தேன் என்றால் இல்லை. போலீஸ் விசாரணையில் சரவணன் வீட்டிற்கு எதிரே ராஜா வீடு உள்ளது என்று சொன்னேன், அவை இரண்டும் பக்கத்து பக்கத்து வீடு. இரண்டு வீட்டிற்கும் இடையே சுமார் 5 அடி தூரம் இருக்கும். திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு காரில் போனதாகத்தான் முதல் விசாராணையிலும், போலீசிலும், புகாரிலும், 164 **Crpc** வாக்குமூலத்திலும் சொல்லி

இருக்கிறேன் என்றால் இல்லை. நாங்கள் ரெட்டியார் சத்திரம் மருத்துவமனைக்கு சென்றபோது போலீசார் அங்கு இல்லை. திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்ற போது போலீசார் அங்கு இல்லை. மார்ச்சுவரிக்கு என் கணவரை என் கணவரை கொண்டு சென்றபோதும் போலீசார் அங்கு வரவில்லை. நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்த பிறகே போலீசார் மருத்துவமனைக்கு வந்தார்கள். நான் முதல் விசாரணையில் என் கணவரை கீழே தள்ளி அதன் பின்னர் எதிரி கீழே தள்ளி தலையிலும் , நெஞ்சிலும் அடித்தார் என்ற விபரத்தை முதல் விசாரணையிலும், போலீசாரிடமும், 164 **Crpc** வாக்குமூலத்திலும் நான் சொல்லியுள்ளேன். நான் மருத்துவமனையில் இருந்த போதே போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று விட்டார். போலீசார் என்னை காவல் நிலையத்தில் விசாரித்தனர். வீட்டில் விசாரிக்க வில்லை. புகாரை நான் தான் எழுதினேன். புகாரில் ஒரு கையெழுத்து தான் போட்டேன். போலீசார் அதை தவிர எழுதப்படாத வெள்ளை தாளிலும் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றால் இல்லை. நான் முதல் விசாரணையில் சொன்னது போல காவல் நிலையம் சென்று புகார் கொடுக்கவில்லை என்றும், நான் எழுதப்படாத வெள்ளை தாளில் கையெழுத்து மட்டும் போட்டு போலீசாருக்கு கொடுத்தேன் என்றும், எதிரி எனது கணவரை அடித்து காயம் ஏற்படுத்தவில்லை என்றும், நீதிபதியிடம் கொடுத்த வாக்குமூலத்தை பொய்யாக கொடுத்து தற்போது உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. எதிரியின் பாட்டி ராஜம்மாள் திண்டுக்கல், கூடுதல் உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.682/2014 என்ற வழக்கை என் மாமியார் உட்பட 8 பேர் மீது தாக்கல் செய்து தற்போதும் அது நிலுவையில் இருக்கிறது என்றால் சரிதான். மேற்கண்ட வழக்கை மனதில் வைத்து தான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

R KANAGARAJ

Digitally signed by R KANAGARAJ
Date: 2024.08.14 19:10:01 +0530